**கவனிக்க** .- *2014.08.22 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* III *மற்றும் பகுதி* IV *(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1878 - 2014 අගෝස්තු මස 29 වැනි සිකුරාදා - 2014.08.29

*1878 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1026 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1037 | ஆதன விற்பனைகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1038 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| துணைவிதிகள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- பிரதேச சபை (திருத்தச்) சட்டமூலம் மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் ஆகியன, 2014, ஓகத்து மாதம் 01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாக வெளியிடப்படுகின்றன.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## கொத்மலை பிரதேச சபை

கொத்மலை பிரதேச சபையில் வெற்றிடமாக காணப்படும் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் நிரந்தர வதிவினைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவி | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் (பொ. நி. சு.) 6/2006 IV இற்கமைய | | கல்வித் தகைமை |
|---|---|---|---|---|---|
| 1 | சாரதி III (ஆ) வகுப்பு (டெக்டர்) | 1 | PL-3-2006 A ரூபா 12,470-10×130-10 x 145 – 10×160 - 12×170- ரூபா 18,860 | (அ) | இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கல்வி பொது தராதர சாதாரணப் பரீட்சையில் சிங்கள மொழி மூலம் அல்லது தமிழ் மொழி மூலம் குறைந்த பட்சம் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியும் நான்கு பாடங்களில் சாதாரண சித்தியும் மொத்தம் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். |
| | | | | (ஆ) | சொந்த/வாடகை வாகனம் மற்றும் பாரம் 34 தொன்னுக்கு குறைந்த ஸ்டேசன் வேகன் வாகனம் ஓட்டு வதற்காக மோட்டார் வாகன ஆணை யாளர் மூலம் வெளியிடும் தகுதி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். |
| | | | | (இ) | சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றதன் பின்னர் இரண்டு வருட அனுபவம் இருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் முன்வைக்க வேண்டும்.) |
| | | | | (ஈ) | பகல் நேரங்களில் மற்றும் இரவு நேரங்களில் சேவை செய்வதற்கு உடல் உள சீரிய நன்னடத்தையுடன் தேகா ரோக்கியமாக இருப்பதுடன் மன தைரிய மும் இருத்தல் வேண்டும். |
| | | | | (உ) | வீதி ஒழுங்கு மற்றும் இலட்சனைகள் பற்றிய சிறந்த அறிவு இருத்தல் வேண்டும். |
| | | | | (ஊ) | உயரம் 5 அடி 2 அங்குலமாக இருத்தல் வேண்டும். |
| 2 | மின் தொழில்நுட்ப வியலாளர் III வகுப்பு | 1 | PL-2-2006 A ரூபா 12,210-10×130-10 x 145 – 10×160 - 12×170- ரூபா 18,600 | (அ) | இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கல்வி பொது தராதர சாதாரணப் பரீட்சையில் சிங்கள மொழி மூலம் அல்லது தமிழ் மொழி மூலம் குறைந்த பட்சம் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியும் நான்கு பாடங்களில் சாதாரண சித்தியும் மொத்தம் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். |

| தொடர் இலக்கம் | பதவி | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் (பொ. நி. சு.) 6/2006 IV இற்கமைய | கல்வித் தகைமை |
|---|---|---|---|---|
| | | | | (ஆ) குறிப்பிட்ட பதவியில் குறைந்தபட்சம் இரண்டு வருட அனுபவம் இருத்தல் வேண்டும். (அரச அங்கீகாரம் பெற்ற நிறுவன சான்றிதழ் முன்வைக்கப்பட வேண்டும்.) |
| | | | | (இ) தொழில் பயிற்சியின்படி தேசிய தொழிற்பயிற்சி தகைமை (NVQ3) சான்றிதழ் பெற்றிருத்தல் |
| | | | | அல்லது |
| | | | | (ஈ) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சியளிப்பு திணைக்களத்தில் (DTET) தொழிலுக்கமைய ஒரு வருடத்திற்கு குறையாத பாடப்பயிற்சி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் |
| | | | | அல்லது |
| | | | | (உ) தேசிய இளைஞர் சேவை சபையில் (NYSC) தொழிலுக்கமைய ஒரு வருடத்திற்கு குறையாத பாடப்பயிற்சி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் |
| | | | | அல்லது |
| | | | | (ஊ) இலங்கை தொழில் பயிற்சி அலுவல கத்தில் (VTA) தொழிலுக்கமைய ஒரு வருடத்திற்கு குறையாத பாடப்பயிற்சி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் |
| | | | | அல்லது |
| | | | | (எ) தேசிய அரச மற்றும் தொழில்நுட்ப பயிற்சியளித்தல் திணைக்களத்தில் (NAITA) தொழிலுக்கமைய ஒரு வருடத்திற்கு குறையாத பாடப்பயிற்சி செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் |
| | | | | அல்லது |
| | | | | (ஏ) தொழிற்பயிற்சி கல்வி நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தில் தொழிலுக்கேற்ப ஒரு வருடத்திற்கு குறையாத பாடப் பயிற்சி செய்து சான்றிதழ் பெற் றிருத்தல். |
| | | | | (ஐ) மின் தொழில் நுட்பவியலாளராக 2 வருட அனுபவம் பெற்றிருத்தல். |

| தொடர் இலக்கம் | பதவி | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் (பொ. நி. சு.) 6/2006 IV இற்கமைய | | கல்வித் தகைமை |
|---|---|---|---|---|---|
| 3 | அலுவலக உதவியாளர் III வகுப்பு | 6 | PL-1-2006 A<br>ரூபா 11,730-10×120-<br>10 x 130 – 10×145 - 12×160-<br>ரூபா 17,600 | (அ) | இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கல்விப் பொது தராதர சாதாரணப் பரீட்சையில் சிங்கள மொழி மூலம் அல்லது தமிழ் மொழி மூலம் குறைந்த பட்சம் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். |
| | | | | (ஆ) | குறித்த பதவி சம்பந்தமாக இருக்கும் அனுபவம் கவனத்திற் கொள்ளப்படும். |
| 4 | காவலாளர் III வகுப்பு | 2 | PL-1-2006 A<br>ரூபா 11,730-10×120-<br>10 x 130 – 10×145 - 12×160-<br>ரூபா 17,600 | (அ) | இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கல்வி பொது தராதர சாதாரணதரப் பரீட்சையில் சிங்கள மொழி மூலம் அல்லது தமிழ் மொழி மூலம் குறைந்தபட்சம் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். |
| | | | | (ஆ) | உயரம் 5 அடி 4 அங்குலமாக இருத்தல் வேண்டும். |
| | | | | (இ) | குறித்த பதவி சம்பந்தமாக இருக்கும் அனுபவம் கவனத்தில் கொள்ளப்படும். |
| | | | | (ஈ) | பகல் மற்றும் இரவு நேரங்களில் சேவை செய்தல் வேண்டும். |
| | | | | (உ) | சிறந்த நன்னடத்தையுடன் இருப்பதுடன் கொத்மலை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட எப்பிரதேசத்திலும் சேவை செய்யக்கூடிய உடல் நிலையும் தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும். |
| 5 | வீதித்தொழிலாளி | 2 | PL-1-2006 A<br>ரூபா 11,730-10×120-<br>10 x 130 – 10×145 - 12×160-<br>ரூபா 17,600 | (அ) | குறைந்தபட்சம் 8 ஆம் வகுப்பு (9 ஆம் ஆண்டு) சித்தி பெற்றிருத்தல். |
| | | | | (ஆ) | தற்போது தற்காலிக மற்றும் பதிலீட்டு ஒப்பந்த சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். |
| 6 | நூலக சேவகர் | 1 | PL-1-2006 A<br>ரூபா 11,730-10×120-<br>10 x 130 – 10×145 - 12×160-<br>ரூபா 17,600 | (அ) | இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கல்வி பொது தராதர சாதாரணப் பரீட்சையில் சிங்கள மொழி மூலம் அல்லது தமிழ் மொழி மூலம் குறைந்த பட்சம் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். |

| தொடர் இலக்கம் | பதவி | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் (பொ. நி. சு.) 6/2006 IV இற்கமைய | கல்வித் தகைமை |
|---|---|---|---|---|
| | | | | (ஆ) நூலகம் பற்றிய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருப்பதுடன் 2 வருட அனுபவம் இருத்தல். |
| 7 | சுத்திகரிப்பு தொழிலாளி | 6 | PL-1-2006 A ரூபா 11,730-10×120-10 x 130 – 10×145 - 12×160-ரூபா 17,600 | (அ) குறைந்தபட்சம் 8 ஆம் வகுப்பு (9 ஆம் ஆண்டு) சித்தி பெற்றிருத்தல். (ஆ) தற்போது தற்காலிக மற்றும் பதிலீட்டு ஒப்பந்த சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு முன் உரிமை அளிக்கப் படும். |

**1. சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான பொது நிபந்தனைகள்.-**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் ;

(ii) விண்ணப்பதாரி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு முன்னதாக 03 வருடங்கள் கொத்மலை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும். (வாக்காளர் பட்டியல் அல்லது பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் மூலம் வதிவை உறுதிப்படுத்துதல் வேண்டும்.) ;

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (எனினும் ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள நிரந்தர ஊழியர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை பொருந்தாது) ;

(iv) சீரிய நடத்தையும் சிறந்த தேகாரோக்கியமும் கொண்டிருத்தல் ;

(v) தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டு தண்டிக்கப்பட்டவராக இருத்தலாகாது ;

(vi) கொத்மலை பிரதேச சபையில் நிரந்தர, அமைய, தற்காலிக மற்றும் பதிலீட்டு ஒப்பந்த சேவையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**2. ஆட்சேர்ப்பு முறை.-**

(i) சாரதி, மின் தொழில்நுட்பவியலாளர் பதவிகளுக்கு சேர்த்துக்கொள்ளும் போது தகைமைகளை நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை மூலமாக ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

(ii) ஏனைய பதவிகள் நேர்முகப் பரீட்சை மூலமாக ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**3. சேவையிலீடுபடுவதற்கான நிபந்தனைகள்.-**

(அ) இப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியம் உடையதுமாகும். விதவைகள், அநாதைகள் நிதியத்திற்கு பங்களிப்பு வழங்குதல் வேண்டும்;

(ஆ) இப்பதவி மூன்று வருடக்கால தகுதிகாண் காலத்தை கொண்டது ;

(இ) இந்நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தாபன விதிக்கோவையின் நிபந்தனைகளுக்கும் நிதிப்பிரமாணங்களின் விதிமுறைகளுக்கும் வடமேல் மாகாண பொதுச்சேவை நிபந்தனைகளுக்கும் விதிமுறைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்கள் பற்றிய கட்டளைச்சட்டங்கள், சட்டங்களினதும் ஏற்பாடுகளுக்கும் கொத்மலை பிரதேச சபையினால் விதிக்கப்படும் கட்டளைகளுக்கும் உட்பட்டு செயற்படுதல் வேண்டும் ;

(ஈ) அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சை குழுவினரின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்;

(உ) விண்ணப்பம் கோரப்பட்ட பின்னர் அல்லது இடையில் ஆட்சேர்த்தலை தாமதப்படுத்தும் அல்லது மாற்றியமைக்கும், திருத்தங்கள் செய்யும் பூரண அதிகாரம் கொத்மலை பிரதேச சபை செயலாளருக்கு உண்டு.

**4. சேவை நிபந்தனைகள்.-**

(அ) ***பொதுவான நிபந்தனைகள்*** : இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் 1 ஆம் தொகுதி 11 ஆம் அத்தியாயத்தின் 10 ஆம், 12 ஆம் பிரிவுகளில் குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்கு பொருத்தமானது.

(ஆ) ***மொழி தேர்ச்சி*** : எல்லா உத்தியோகத்தர்களும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஏற்பாடுகளையும் மொழிக்கொள்கை அமுலாக்கத்தில் காலத்திற்கு காலம் அமுலாக்கும் சட்டதிட்டங்கள் மற்றும் அரசியல் அமைப்பையும் கடைப்பிடித்தொழுக வேண்டும்.

5. **விண்ணப்பிக்கும் முறை.-**

(அ) விண்ணப்பதாரிகள் இங்கு காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2014.09.25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கும் விதத்தில் "செயலாளர், கொத்மலை பிரதேச சபை, பூண்டுலோயா" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்ப வேண்டும். விண்ணப்ப அனுப்பும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி தெளிவாக குறிப்பிட வேண்டும். பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ஆ) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும் மேலும் குறிப்பிட்ட திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

எச். எம். எஸ். விஜேரத்ன,
செயலாளர்,
கொத்மலை பிரதேச சபை.

கொத்மலை பிரதேச சபை அலுவலகம்,
பூண்டுலோயா,
2014, ஓகத்து 8.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**கொத்மலை பிரதேச சபை**

வடமேல் மாகாண அரசாங்க சேவையில் கொத்மலை பிரதேச சபையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு - 2014

...................... பதவி

1. விண்ணப்பதாரியின் பெயர் :----.
   முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.
2. நிரந்தர வதிவு மாவட்டம் :----.
3. நிரந்தர முகவரி :----.
4. பிறந்த திகதி :
   வருடம் :----, மாதம் :----, திகதி :----.
5. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
6. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
7. பால் :----.
8. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது :----.
9. இலங்கைப் பிரசையாவது பிறப்பினாலா? அல்லது பதிவின் மூலமாகவா? :----.
10. கல்வித் தகைமைகள் :- (சித்தியடைந்த பரீட்சைகள் பற்றிய விபரம்) : ----.
11. தொழிற் தகைமை : ----.
12. சேவை அனுபவம் : ----.
13. நீங்கள் எப்போதாவது ஏதாவது குற்றச்சாட்டு ஒன்றிற்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? :----.
14. நீங்கள் ஏற்கனவே இப்பிரதேச சபையில் பணி புரிவதாயின் சேவைக்காலமும் ஏனைய விபரங்களும் இப்பதவியின் தன்மை (நிரந்தர, அமைய, தற்காலிக) :-----.

இங்கு தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் வெளிப்படுத்துகின்றேன். இவ்வாட்சேர்ப்பு பற்றிய நிபந்தனைகளுக்கு அமைய என்னால் பிழையான தகவல்கள் எதுவும் தரப்பட்டிருப்பதாக

நிரூபிக்கப்படுமாயின், பதவி நியமனத்திற்கு முன்னராயின் தகைமையிழப்பிற்கும் பதவி நியமனத்துக்கு பின்னராயின் பணி நீக்கத்திற்கும் உள்ளாக்கப்படுவேன் என்பதை அறிவேன்.

-------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**ஏற்கனவே அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கான திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ................. தற்போது இந்த நிறுவனத்தில் ...................... ஆக சேவையாற்றுகிறார். அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் எவ்விதமான ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) இதுவரை உள்ளாக்கப்படவில்லை என்பதை இத்தால் உறுதிப்படுத்தும் அதேவேளை அவரது விண்ணப்பத்தை அத்தாட்சிப்படுத்தி சமர்ப்பிக்றேன்/ சமர்ப்பிக்கப்படவில்லை.

-----,
திணைக்கள நிறுவன தலைவரது
அல்லது அதிகாரமளிக்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி பெயர் :----.
திணைக்களம் :----.
திகதி :----.

8 - 925

---

**புத்தளம் நகர சபை**

பதவி வெற்றிடங்கள்

புத்தளம் நகர சபையில் வெற்றிடமாகியுள்ள வடமேல் மாகாண அரச சேவையில் III ஆம் தரத்திற்குரிய பின்வரும் பதவிகளுக்காக ஆட்சேர்த்துக்கொள்வதற்காக தகைமை உள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:-

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள குறியீட்டு இலக்கம் | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | சுகாதார மேற்பார்வையாளர் | 2 | PL1-2006A | ரூபா 11,730-10×120-10×130-10×145-10×160- ரூபா 17,600 | க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். (விருப்பத்துக்குரிய பாடங்கள் தவிர்ந்த) |
| 2 | காவலாளர் | 2 | PL1-2006A | ரூபா 11,730-10×120-10×130-10×145-10×160- ரூபா 17,600 | க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். (விருப்பத்துக்குரிய பாடங்கள் தவிர்ந்த) |
| 3 | சுகாதார தொழிலாளி | 6 | PL1-2006A | ரூபா 11,730-10×120-10×130-10×145-10×160- ரூபா 17,600 | அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலையொன்றில் 8 ஆம் தரத்தில் சித்தியடைந்திருக்க வேண்டும். |

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள குறியீட்டு இலக்கம் | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| 4 | பார இயந்திர இயக்குநர் | 1 | PL3-2006A | ரூபா 12,470-10×130-10×145-10×160-12×170- ரூபா 18,860 | க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தவணை முறைகளில் இரண்டு பாடங்களுக்கு திறமைச்சித்தியுடன் 6 பாடங்களிலாவது சித்தியடைந் திருக்க வேண்டும். ஒரு தடவையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். பார ஊர்திகள் ஓட்டுதல் சம்பந்தமாக மோட்டார் போக்கு வரத்து ஆணையாளரால் வழங்கப் பட்ட சான்றிதழொன்றைப் பெற் றிருத்தல். |

**பொதுத் தகைமைகள் :**

(1) விண்ணப்பதாரி பரம்பரை மூலம் அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
(2) விண்ணப்பதாரி புத்தளம் நகர சபை அதிகார எல்லைக்குள் தொடரச்சியாக 3 வருடங்கள் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும். (வாக்காளர் பட்டியல் மூலமாக அல்லது பிரதேச செயலாளரால் உறுதி செய்து கையொப்பமிடப்பட்ட பிரதேச கிராம அலுவலரால் வழங்கப்படும் சான்றிதழொன்றினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்) ;
(3) புத்தளம் நகர சபையில் தற்போது நிரந்த/அமைய/பதிலீட்டு/தற்காலிக/ஒப்பந்த/கொடுப்பனவு அடிப்படையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் ;
(4) நன்னடத்தையும், சிறந்த தேகாரோக்கியமும் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;
(5) விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியாகும் போது 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது சேவையிலீடுபட்டுள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது. ஆனால் அந்த பதவியில் சேர்த்துக்கொள்ளும் திகதியாகும் போது உச்ச வயதெல்லையை தாண்டியிருக்கக் கூடாது ;
(6) விண்ணப்பதாரி குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றமொன்றினால் குற்ற தீர்ப்பளிக்கப்பட்டவராகவோ அல்லது அரச, உள்ளூராட்சி/மாகாண சேவையிலிருந்து நீக்கப்பட்டவராகவோ இருக்கக்கூடாது ;
(7) பணித் தேவையின் நிமித்தம் முறைப்படியான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் பொருத்தமானவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்படுவர் ;
(8) விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது கோரப்பட்ட காலப் பகுதியில், இந்த ஆட்சேர்ப்பினை தாமதப்படுத்துவதற்கு, அல்லது மாற்றுவதற்கு, அல்லது இந்த அறிவித்தலை செல்லுபடியற்றதாக்குவதற்கு அல்லது திருத்தியமைப்பதற்கான முழுமையான அதிகாரம் புத்தளம் நகர சபை செயலாளருக்கு உரியதாகும்.

**சேர்த்துக்கொள்ளும் முறை.-**

(1) ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவுசெய்யப்படும் ;
(2) உரிய தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**சேவையிலீடுபடுத்துவது தொடர்பான நிபந்தனைகள்.-**

(1) இந்த பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்துடன் கூடியதுமாகும் ;
(2) விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யவேண்டும் ;
(3) நியமனம் 3 வருட கால தகுதிகாண் காலப் பகுதிக்கு உட்படுவதுடன், மூன்று (03) வருட கால முடிவில் சேவை, வருகை, ஒழுக்கம் திருப்திகரமான நிலையில் உள்ள சேவையாளர்களுக்கு மாத்திரம் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.
(4) இந்நிபந்தனைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக்கோவையின் சட்டதிட்டங்களுக்கும், நிதிப்பிரமாணங்களுக்கும், திணைக்கள கட்டளைகளுக்கும். அரச அல்லது மாகாண சபையினால் அவ்வப்போது வெளியிடப்படும் ஏனைய சட்டங்கள் கட்டளைகளுக்கும் அமைவாக செயல்பட சகல சேவையாளர்களும் உடன்பட்டிருத்தல் அவசியம்.

**விண்ணப்பிக்க வேண்டிய ஒழுங்குமுறை.-** விண்ணப்பதாரி இங்கு காட்டப்பட்டுள்ள, மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக A4 அளவிலான தாள் ஒன்றிலே தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தை 2014.09.30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்குமாறு "செயலாளர், நகர சபை, புத்தளம்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி ''......................'' என குறிப்பிட வேண்டும். பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு, குறித்த திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் கோரப்பட்டதன் பின் அல்லது கோரப்பட்ட கால எல்லைக்குள், சேர்த்துக்கொள்ள தாமதமாவது அல்லது திருத்தப்படுவது அல்லது இவ்வறிவித்தலை நிராகரிப்பது அல்லது திருத்தியமைப்பது என்பவற்றுக்கான பூரண அதிகாரங்களும் புத்தளம் நகர சபையின் செயலாளருக்கு உண்டு.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் அதற்காக தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பத்தோடு பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்க வேண்டுமென்பதோடு, மூலப்பிரதிகளை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) வதிவிடத்தை உறுதி செய்வதற்காக அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கிராம அலுவலரது சான்றிதழ் (பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.) ;
(4) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சான்றிதழ்கள் இரண்டு ;
(5) அனுபவம், தொழில்தகைமைகள் சம்பந்தமான சான்றிதழ்கள் ;
(6) புத்தளம் நகர சபையில் பணி புரிபவராக இருந்தால், சேவைச் சான்றிதழ் ஒன்று.

டபிள்யூ. ஜீ. நிசாந்த குமார,
செயலாளர்,
புத்தளம் நகர சபை.

நகர சபை அலுவலகம்,
புத்தளம்,
2014, ஓகத்து 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**புத்தளம் நகர சபை**

......................................................................... பதவி

1. விண்ணப்பதாரரின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) :----.
2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :----.
3. அஞ்சல் முகவரி :----.
4. தொலைபேசி இலக்கம் :----.
5. பிறந்த திகதி :-
   ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
6. தேசிய அடையாள அட்டையின் இலக்கம் :----.
7. விண்ணப்பப்படிவத்தை பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று வயது :
   வருடங்கள் :---- மாதங்கள் : ---- நாட்கள் :----.
8. ஆண்/பெண் விபரம் :----.
9. விவாவகமானவரா? விவாகமாகாதவரா? :----.
10. தேசிய இனம் :----.
11. நீங்கள் இலங்கை பிரசையா? அவ்வாறாயின் பரம்பரை மூலமா அல்லது பதிவு மூலமா? :----.
12. கல்வித்தகைமைகள் :----.
13. அனுபவமும் தொழில் பயிற்சி தகைமைகளும் :----.
14. நீங்கள் தற்போது புத்தளம் நகர சபையில் சேவை செய்பவராயின்:-
    (1) தற்போது வகிக்கும் பதவி :----.
    (2) அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.
    (3) அப்பதவியின் தன்மை (நிரந்தர/அமைய/தற்காலிக/பதிலீட்டு/ஒப்பந்த/மதிப்பீடு) :----.
15. நீங்கள் எப்போதாவது குற்றச்சாட்டொன்றின் பேரில் நீதிமன்றம் ஒன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவராயின் அந்த தவறையும், வழங்கப்பட்ட தண்டனையையும் பற்றிய விபரம் :----.

இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல் உண்மையானதும், பிழையற்றதும் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதாயினுமொன்று உண்மைக்குப் புறம்பானது அல்லது தவறானது என்று இந்த பதவிக்கு தெரிவு செய்வதற்கு முன்னர் தெரியவந்தால் நான் தகைமையற்றவனாவேன் எனவும். நியமனம் கிடைத்ததன் பின்னர் நிரூபிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடும் செலுத்தப்படாமல் சேவையிலிருந்து நீக்கப்படலாம் எனவும் அறிவேன். அந்த சகல நிபந்தனைகளுக்கும் நான் உட்படுவேன் என்பதனையும் இத்தால் தெரியப்படுத்துகின்றேன்.

---------------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :----.

**தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு நிறுவன தலைவரினது சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரியாகிய திரு./திருமதி/செல்வி இந்த நிறுவனத்தில் .................................... ஆக சேவையிலீடுபடுகிறார். இந்த பதவிக்காக தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க இயலும் /இயலாது என்பதனையும், அவர் எந்த ஒரு தண்டனைக்கும் உள்ளாக்கப்படவில்லை என்பதனையும் இத்தால் உறுதிசெய்வதோடு, விண்ணப்பப்படிவத்தை பரிந்துரைத்து சமர்ப்பிக்கின்றேன்.

---------------------,
நிறுவன தலைவரது கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
பதவிக்கான முத்திரை :----.

8-978

---

**கல்கமுவ பிரதேச சபை**

வடமேல் மாகாண அரச சேவையின் கல்கமுவ பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாக உள்ள சுகாதார நிருவாக உத்தியோகத்தர் பதவிக்கு சேர்த்துக் கொள்வதற்காக இந்த அறிவித்தலில் உரிய தகைமைகளைக் கொண்ட கல்கமுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

(கல்கமுவ பிரதேச சபையில் தற்போது சேவையில் உள்ள நிரந்தர, அமைய, தற்காலிக, பதில் கடமை, கட்டணத்துக்கு, சுயேச்சையான ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமை |
|---|---|---|---|---|
| 1 | வேலை/ வெளிக்கள தொழிலாளர் | 2 | (6/2006 IV) PL - 1- 2006 A பிரகாரம் ரூ. 11,730-10×120- 10×130-10×145- 12×160- ரூ. 17,600. | 1. கல்வி பொது தராதரப் பத்திர சாதாரணத்தர பரீட்சையில் இரண்டு பாடங்களேனும் சித்தியடைந் திருத்தல் வேண்டும். (விருப்பத்துக்குரிய பாடம் தவிர்ந்த) |

**2. வேறு தேவையான தகைமைகள்:**

(1) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) கல்கமுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் ஆகக் குறைந்தது 3 வருடங்கள் நிரந்தரமாக வசித்தவராக இருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு ஆகக்கூடிய வயதெல்லை பார்க்கப்படமாட்டாது.)

(4) விண்ணப்பதாரர் நல்லொழுக்கமும் நல்ல தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(5) தண்டனைச்சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டவராகவோ அல்லது அரச, உள்ளூராட்சி/ மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்பட்டவராகவோ இருத்தல் கூடாது.

**3. சேவைக்குச் சேர்த்துக் கொள்ளும் விதம்.-**

(1) சேவை அவசியத்தைப் பொறுத்து உரிய முறையிலான நேர்முகப் பரீட்சை, செய்முறை பரீட்சையின் பின்னர் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

(2) தற்போது கல்கமுவ பிரதேச சபையில் குறிப்பிட்ட பதவிகளில் அமைய, தற்காலிக, பதில் கடமை, கட்டணத்துக்கு, சேவையில் உள்ள ஊழியர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.

(3) உரிய தகைமைகளை உடைய விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

(4) விண்ணப்பதாரிகளை தெரிவு செய்வதில் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கல்கமுவ பிரதேச சபை செயலாளருக்கு உண்டு.

**4. சேவையில் சேர்த்துக்கொள்வதற்கான நிபந்தனைகள் :**

(1) எல்லாப் பதவிகளும் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமாகும் ;

(2) விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும் ;

(3) ஆட்சேர்ப்பு செய்துக் கொள்ளப்படும் ஒருவர் 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உற்படுவதுடன், தரப்படுத்தப்பட்டு தரம் உயர்த்தப்படுவாராயின் ஒரு வருட காலத்திற்கு வேலைப் பார்க்கும் காலத்திற்கு உற்படுதல் வேண்டும் ;

(4) அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக விஷேடமாக அரச கரும மொழிச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்காகவும், தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றதும் இதன் பின் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சட்டத்திட்டங்களுக்கு உடன்படல் வேண்டும்.

(5) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக கௌரவ வடமேல் மாகாண ஆளுநரினால் அனுமதிக்கப்பட்டுள்ள சேவை சட்டத்திட்டங்களுக்கும், நிதிச் சட்டத்திட்டங்களுக்கும் அரச திணைக்கள கோட்பாடுகளுக்கும் வடமேல் மாகாண சபையினால் அல்லது வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் விண்ணப்பதாரிகள் கட்டுப்படல் வேண்டும்.

**5. விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முறை .-**

(1) மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரித்து விண்ணப்பப்படிவத்தினை 2014.09.24 ஆந் திகதிக்கு முன்னர் “செயலாளர், பிரதேச சபை, கல்கமுவ” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

(2) விண்ணப்பத்தின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

(3) விண்ணப்பப்படிவத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அத்தாட்சிப்பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்:-

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்;

(ஆ) கல்விச் சான்றதழ்கள் ;

(இ) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் பிரதேச செயலாளரின் சான்றிதழ் ;

(ஈ) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட நன்னடத்தை சான்றிதழ்கள் இரண்டு ;

(உ) தொழில்சார் அனுபவம் பற்றிய சான்றிதழ்.

ஏ. பி. நிமல் ரத்னாயக,
செயலாளர்,
கல்கமுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கல்கமுவ,
2014, ஓகத்து 11.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**வடமேல் மாகாண மாகாண அரச சேவையில் கல்கமுவ பிரதேச சபை .......................... பதவிக்கான விண்ணப்பம்**

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.
2. நிரந்தர முகவரி :----.
3. (i) பிறந்த திகதி :-
ஆண்டு :----- மாதம் :---- திகதி :----.
(ii) 2014.09.24 திகதிக்கு வயது :
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
4. தேசிய ஆள் அடையாளட்டை இலக்கம் :----.
5. ஆண்/பெண்:----.
6. திருமணமானவர்/திருமணமாகாதவர் என்பது பற்றி :----.
7. தேசிய இனம் :----.
8. வடமேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவு காலம் :----.
9. நீங்கள் இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் பரம்பரையாகவா? அல்லது பதிவு முறையிலா? :----.

10. கல்வித் தகைமை (சித்தியடைந்த பரீட்சை பற்றிய விபரம்) :-

(i) சித்தியெய்திய ஆண்டு/தரம் :-----. வருடம் :-----.

(ii) க. பொ. த. (சா/த.) பரீட்சை

பரீட்சை சுட்டெண் :-----. வருடம் :-----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(iii) க. பொ. த. (உ/த.) பரீட்சை

பரீட்சை சுட்டெண் :-----. வருடம் :-----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |

11. தொழில் தகைமையும் அனுபவமும் :----.

12. நீங்கள் தற்போது இந்த பிரதேச சபையில் சேவையில் உள்ளவராயின் அந்த சேவைக்காலமும் விபரமும் :----.

13. நீங்கள் எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி உள்ளீரா? :----.

இந்த விண்ணபப்ப் படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல் உண்மையானதும் பிழையற்றதும் என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன். இங்குள்ள தகவல்கள் உண்மையற்றதும், பிழையானதும் என்றும் இந்த பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவராவேன் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

-------,
விண்ணபதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**
**(தற்போது சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)**

இந்த விண்ணபதாரியினால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையற்றது என்றும் இவர் தேர்ந்தெடுக்கப்படின் சேவையில் இருந்து விடுவிப்பதற்கு நான் உடன்படுகின்றேன் என்றும் தற்போது ......................................... ஆக சேவை செய்கின்றார் என்றும் சிபாரிசு செய்கின்றேன்.

-------,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்:

திகதி :----.

8-998

# கேள்விப் பத்திர அறிவித்தல்கள்

**ஹற்றன் - டிக்கோயா நகர சபை**

*ஹற்றன் பொது சந்தை கட்டிடத்தில் அமைந்துள்ள இல. 20, 21 கடையறைகளை குத்தகை அடிப்படையில் வழங்குதல்*

**கேள்வி அறிவித்தல்**

*ஹற்றன் - டிக்கோயா நகர சபைக்கு சொந்தமான அட்டன் பொது சந்தை கட்டிடத்தில் அமைந்துள்ள இல. 20, 21 கடையறைகளை குத்தகை அடிப்படையில் வழங்க சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்காக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 25.09.2014 ஆந் திகதி மு. ப. 9.30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.*

| கடை இலக்கம் | மீள் செலுத்தப்படும் கேள்வி வைப்பு பணம் ரூபா ச. | கேள்வி பத்திர கட்டணம் Vat + 2% NBT ரூபா ச. | ஆகக்குறைந்த கேள்வி தொகை (வரிகள் உட்பட) ரூபா ச. |
|---|---|---|---|
| கடை இல. 20 | 1,00,000 0 | 5,000 0 | 9,12,000 0 |
| கடை இல. 21 | 1,00,000 0 | 5,000 0 | 9,12,000 0 |

1. கேள்வி விண்ணப்பம் : 24.09.2014 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பதாக விண்ணப்பப்படிவ கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு கட்டணத்தை சபை அலுவலகத்தில் செலுத்தி விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

2. கடையறையை பார்வையிடல் : வாரத்தின் அலுவலக தினங்களில் பார்வையிட முடியும்.

3. மாத வாடகை : அரச மதிப்பீட்டாளரால் மதிப்பிடப்படும் மதிப்பீட்டு வாடகை

4. குத்தகை காலம் : 3 வருடம்

5. கேள்வி பத்திரம் : 25.09.2014 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு நகர சபை கூட்ட மண்டபத்தில் திறக்கப்படும்.

6. சகல கேள்வி பத்திரங்களையும் மூலப்பிரதி, இணைப்பிரதி என்று இரண்டு பிரதிகளாக அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "ஹற்றன் பொது சந்தை கட்டிடத்தில் அமைந்துள்ள இல. . . . . . கடையறைகளை குத்தகை அடிப்படையில் வழங்குதல்" என குறிப்பிட்டு தலைவர் ஹற்றன்-டிக்கோயா நகர சபை, ஹற்றன் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைப்பதன் மூலம் அல்லது இச்சபையின் கேள்வி மனு பெட்டியில் இடுவதன் மூலம் சமர்ப்பிக்க முடியும்.

7. கேள்விச் சபைக் குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானம் ஆகும்.

8. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வியாளர் முழு தொகையினையும் கேள்வி திறக்கப்படும் தினத்தில் செலுத்துதல் ேண்டும்.

மேலதிக விபரங்களை சபையின் தலைவர்/செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
051-2222275/051-2222276.

அழகமுத்து நந்தகுமார்,
தலைவர்,
ஹற்றன்-டிக்கோயா நகர சபை.

நகர சபை அலுவலகம்,
ஹற்றன்-டிக்கோயா,
2014, ஓகத்து 7.

8-885

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## அம்பலங்கொடை நகர சபை

வீதிகள் பெயரிடல்

அம்பலங்கொடை நகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள கீழே அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வீதி அட்டவணையில் "உத்தேசிக்கப்பட்ட பெயரின்" கீழ் பெயரிடுவதற்காக பிரதேச சபையின் ஆலோசனை அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 198 ஆவது பிரிவின் பிரகாரம் கௌரவ உள்ளூராட்சி விடய பொறுப்பு அமைச்சரினால் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

அதன்படி இவ்வீதி இதன் பின்னர் உத்தேசிக்கப்பட்ட பெயர் கொண்டழைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக இத்தால் அறியத்தருகிறேன்.

தவிசாளர்,
அம்பலங்கொடை நகர சபை.

**அட்டவணை**

| வீதி | உத்தேசிக்கப்பட்ட பெயர் |
|---|---|
| படபொல முச்சந்திக்கு அருகில் அமைந்துள்ள கால-எல்பிட்டிய வீதியில் ஆரம்பமாகும் ஜனசலு நிறுவனத்திற்கு அருகிலுள்ள வீதி | கிராம சபை அங்கத்தவர், ஜினசேன வருஷவிதான மாவத்தை |

8-1081

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.